Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC .No. 68/2020**

**Deposition of PW. 10 (LW.13)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜாராம் | ஜாதி | : | |
| த/பெ | : | திருமலைச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026.

( 5வது எதிரி ஆஜர். 1 முதல் 4 மற்றும் 7, 9 முதல் 11, 14 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது. 6, 8, 12, 13 வது எதிரிகள் இறந்துவிட்டார்கள்.)

**முதல் விசாரணை**

நான் கன்னிவாடி, ரெட்டியார்பட்டியில் குடியிருந்துகொண்டு வழக்கறிஞராக பணிபுரிந்து தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக பன்றிமலை கிராமம், K hills ல் சுமார் 60 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 4 1/2 ஏக்கர் சர்வே எண்.48 ல் கட்டுப்பட்ட நிலத்தில் இளவம்பஞ்சு மரங்கள், எலுமிச்சை மரம், தானாக வளர்ந்த தோதகத்தி மரங்கள், பலா மரம், குமிழ் மரங்கள் ஆகிய மரங்கள் உள்ளன. அதை எனது தோட்டத்தில் வேலை பார்க்கும் தெய்வேந்திரன் மற்றும் சில நபர்களை வைத்து பராமரித்து வந்தேன். கடந்த 27.02.2004 ஆம் தேதி எனது தோட்டத்தில் காவல்காரர் தெய்வேந்திரன் என்பவர் எனக்கு தொலைபேசி மூலமாக சில நபர்கள் எனது நிலத்தில் தானாக வளர்ந்த தோதகத்தி மரங்களை வெட்டிக்கொண்டிருப்பதாக சொன்னார். நான் உடனே கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு சென்று எனது நிலத்தில் தானாக வளர்ந்த தோதகத்தி மரங்களை சில நபர்கள் வெட்டிக்கொண்டிருப்பதாகவும், அது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கும் படி நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் நான் சம்பவ

தினத்தன்று கன்னிவாடி வனச்சரக அலுவரிடம் கொடுத்த புகார் மனு ஆகும். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.27/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அங்கிருந்த கன்னிவாடி வனச்சரக அலுவலர் திரு. வடிவேல் அவர்கள் அது சம்மந்தமாக சிறப்பு விசாரணை குழுவினை செம்பட்டி வனச்சரக அலுவலர் தலைமையில் அமைக்கப்பட்டு அதில் வனவர் சேர்வராயன், சாமிக்கண்ணு, மகேந்திரன் மற்றும் சிலர் வனச்சரகத்தை சேர்ந்த அலுவலர்கள் சுமார் 6, 7 நபர்களுடன் நானும் எனது ஜுப்பில் அழைத்துக்கொண்டு சுமார் 04.00 மணியளவில் சம்பவ இடமான எனது தோட்டத்திற்கு அழைத்துச் சென்றேன். அங்கு சென்று நாங்கள் பார்த்தபோது தோதகத்தி மரங்களை சுமார் 7 நபர்கள் வெட்டிக்கொண்டிருந்தார்கள். அந்த நபர்களை என்னுடன் வந்த வன அலுவலர்கள் பிடித்தார்கள். அவர்கள் பயன்படுத்திய கோடாரிகள், ரம்பம், அறுவாள் ஆகியவற்றை வைத்திருந்தார்கள். அங்கு அந்த நபர்களை வன அலுவர்கள் பிடித்த பின்பு வெட்டி சாய்க்கப்பட்ட தோதகத்தி மரங்களில் செதுக்கி வெட்டிய 28 ம், செதுக்காமல் இருந்த உருட்டுக்கட்டைகள் 2ம் இருந்தன. அந்த கட்டைகளை கைப்பற்றி அதை என்னிடம் கொடுக்கும்பொழுது அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், கையெழுத்து போட்டேன். அந்த பார்வைமகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.28/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கட்டைகள் என்னுடைய உடைமையில் தான் இருந்தது. அந்த கட்டைகளை என்னிடம் ஒப்படைத்தார்கள்.

அதன்பின்பு வன அலுவலர்கள் அந்த நபர்களை அழைத்துக்கொண்டு சென்றார்கள். நானும், எனது தோட்டத்து காவல்காரரும் கன்னிவாடி வனச்சரக அலுவலகம் சென்றோம். கடந்த 29.02.2004 ஆம் தேதி மறுபடியும் சம்பவ இடத்தை பார்வையிட வேண்டும் என சொல்லி வனச்சரக அலுவலர்கள் அங்கு வந்தார்கள். புதருக்குள் இருந்த 5 கட்டைகளை எடுத்து என்னிடம் ஒப்படைத்தார்கள். 29 ஆம் தேதி ஒப்படைத்தார்கள். அதை நான் பெற்றுக்கொண்டதற்காக அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த ஒப்புதல் கடிதம் **(அ.சா.ஆ.29/PW.10)**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு 02.05.2004 ஆம் தேதி வனச்சரக அலுவலருக்கு கிடைத்த தகவலின் பேரில் செதுக்கப்பட்ட 2 கட்டைகளை சம்பவ இடத்தில் வைத்து என்னிடம் ஒப்படைத்தார்கள். அந்த ஒப்புதல் கடிதம் ஏற்கனவே அ.சா.1 மூலம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.30/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் கடிதம் கடந்த 27.02.2004 ஆம் தேதி 28 செதுக்கப்பட்ட கட்டைகள், 2 உருட்டுக்கட்டைகளை பெற்றதற்கான ஒப்புதல் கடிதம் ஆகும். அந்த ஒப்புதல் கடிதம் ஏற்கனவே அ.சா.1 மூலம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.31/PW.10)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு இது சம்மந்தமாக வழக்கு நடக்கும்பொழுது என்னை அழைப்பதாக சொன்னார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor